Lakeridge Health



Cynthia Davis
President and CEO



Dr. Tony Stone
Chief of Staff

**பெப்ருவரி 10, 2021**

அன்பார்ந்த நண்பர்கள் மற்றும் அயலிடப் பெருமக்களுக்கு,

Lakeridge Health (லேக்றிட்ஜ் ஹெல்த்) ஆரோக்கிய சேவை அமைப்புக்கு நீங்கள் வழங்கி வருகின்ற தொடர்ச்சியான ஆதரவுக்கும் கோவிட்-19 நோய் பரவுவதைத் தடுப்பதற்காக நீங்கள் எடுத்து வரும் முயற்சிகளுக்கும் நாங்கள் நன்றி கூறுகிறோம்.

ஒன்றிணைந்து நாம் பெரும்புல நோயினை எதிர்த்துப் போராடும் இச்சமயத்தில், கடந்த வருடத் தொடர்ச்சியாக மாகாண அரசு விதித்துள்ள இரண்டாவது பொதுமுடக்கம் (lockdown) காரணமாக நாம் மீண்டும் ஒரு முறை ஓர் அவசரகால நிலைமைக்கு ஆளாகி இருக்கிறோம். அவசியமான வேலைக்குப் போய் வருதல், பொருள் வாங்குதல் மற்றும் மருத்துவ சந்திப்புகளுக்கு வெளிச் செல்வது என்பவை தவிர மற்றைய நேரங்களில் எல்லாம் மக்கள் வீட்டிலேயே தங்கிவிடுவதால், டூறாம் பிரதேசத்தில் கடந்த சில வாரங்களாக கோவிட்-19 நோய் சற்று தணிந்து வருவதைத் காண முடிகிறது. ஆயினும் நாம் இன்னமும் எமது வைத்தியசாலைகளில் கோவிட்-19 நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளில் கணிசமான எண்ணிக்கையினருக்கு சிகிச்சை அளித்து வருகிறோம்.

உங்களுக்கு சேவை வழங்கும் அதே சமயம், நாங்கள் பெரும்புல நோயின் விளைவாக ஏற்படும் தேவைகளை மாகாண அளவில் வழங்குவதற்கும் உதவி வருகிறோம். ஒன்ராறியோவின் பிற பகுதிகளில் உள்ள வைத்திய சாலைகளில், எமது ஆரோக்கிய சேவைப் பங்காளர்களாக பணிபுரிபவர்களுக்கு கோவிட்-19 நோயாளருக்கான இடநெருக்கடி ஏற்படுகையில், நாங்களும் பராமரிப்புக்கான எமது பங்கினைச் செய்து உதவி வருகிறோம். எமக்கும் இப்படியான ஒரு தேவை ஏற்படுகையில், இதே பங்காளர்களிடம் எமக்கு உதவுமாறு கேட்போம்.

இந்தப் பெரும்புல நோய்க்கு முகம் கொடுத்து போராடுவதால் எம் எல்லோரும் ஏற்படும் களைப்பு உணர்வுக்கு மத்தியிலும், எமது முன்னணிச் சேவைக் குழுவினர் எமது சமூகத்தில் விசேடித்த மருத்துவ பராமரிப்பு தேவைப்படுகின்ற மக்களுக்கு சேவை வழங்குவதில் அசாதாரண அளவு மீட்சி ஆர்வமும் கடமை ஈடுபாடும் காட்டுகின்றனர். எமது சேவைக் குழுவினர் தளராமல் உழைத்து மக்களுக்கு பாதுகாப்பான, உயர்தரம் கொண்ட பராமரிப்பினை வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்குடன், புதுமையான வழிகளில் புதிய மருத்துவ செயற்பாடுகளைப் புகுத்தி பணியாற்றி வருகின்றனர்.

**தடுப்புசி மருந்து புதிய செய்தி: முன்னுரிமை பெறும் மக்கள் தொகுதியினருக்கு வழங்குவதில் முன்னேற்றம் தொடருகிறது.**

புதிய வருடத்தின் ஆரம்பத்தோடு கோவிட்-19 நோயுக்கான முதற்பகுதி தடுப்பூசி மருத்தும் நம்பிக்கையளிக்கும் விதத்தில வந்து சேர்ந்தது. Pfizer COVID-19 தடுப்பூசி மருந்தினை விநியோகிக்கின்ற ஒன்ராறியோ மாகாண வைத்திய சாலைகளில் ஒன்றாக Lakeridge Health செயற்படுவதில் எமது அமைப்பு பெருமையடைகிறது. ஓஷாவா வைத்தியசாலை ஸ்தலத்தில் அமைந்து உள்ள தடுப்பூசி மருந்துச் சிகிச்சை நிலையத்தின் மூலமாகவும், எமது நடமாடும் தடுப்பூசி மருந்து சிகிச்சை நிலையம் வழியாகவும் நாங்கள் இதுவரை 15,000 இலும் கூடிய முன்னுரிமை பெறும் மக்களுக்கு தடுப்பூசி மருந்து உடலில் செலுத்தியுள்ளோம். இவர்களில் அடங்கியவர்கள்: நீண்டகால பராமரிப்பு இல்லங்கள் மற்றும் ஓய்வுகால இல்லங்கள் என்பவற்றில் உள்ள வதிவாளர்கள், பிணியாளர்கள் மற்றும் அத்தியாவசிய பராமரிப்பு வழங்குவோர் ஆகியோருடன் உயர் ஆபத்தினை எதிர்கொள்ளும் ஆரோக்கிய பராமரிப்புப் பணியாளர்கள்.

ஒன்ராறியோ மாகாணத்தில் இப்பொழுது நடைபெறும் தடுப்பூசி மருந்துக்கான கட்டம்-1 விரிவாகும் விநியோகச் சேவையில், நாம் தற்பொழுது தீவிர கவனம் செலுத்திச் செயற்பட்டு வருகிறோம். Durham Region Paramedics மற்றும் Public Health ஆகியோரின் கூட்டு முயற்சியுடன், கட்டம்-1 இற்கு உரிய காலத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள பலவீனமான மக்கட் குழுக்களில் அடங்குபவர்களை பாதுகாக்கும் நோக்கத்துடன், நாங்கள் தடுப்பூசி மருந்து கிடைக்கும் அளவின் அடிப்படையில், முடிந்த அளவு வேகத்துடன், இந்த தடுப்பூசி மருந்தினை விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறோம்.

அங்கீகாரம் பெற்ற தடுப்பூசி மருந்து வகைகள் மேலும் விரிவாக வழங்கப்படுவது பற்றிய செய்திகளை உங்களில் பலர் எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருப்பீர்கள் என்பதை நாம் அறிவோம். எமது சிகிச்சை நிலையத்தில் இருந்து, பொதுமக்களுக்கு தடுப்பூசி வழங்கும் சந்திப்பு ஏற்பாடுகளை இன்றைய காலத்தில் நாங்கள் வழங்க முடியாதவர்களாக இருக்கிறோம். ஒன்ராறியோ மாகாணத்தின் தடுப்பூசி மருந்து விரிவாக்க வழங்கல் திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் பெறுவதற்கு தயவுசெய்து Ministry of Health website அல்லது Durham Region Public Health website ஆகிய வலைத்தளங்களில் ஒன்றுக்குச் சென்று பாருங்கள். இம்முயற்சியில் எமது மருத்துவப் பங்காளர்களுடன் இணைந்து ஒரு பங்காண்மை முறையில் நாம் அடுத்து வரும் மாதங்களில் செயற்படுவோம். தடுப்பூசி மருந்துகள் எங்களிடம் வந்து சேர்ந்தவுடன், உங்களை அவை அடையும் என்பதை உறுதி செய்வோம்.

**கணினி வழியான அவசர பராமரிப்பு சிகிச்சை நிலைம்: உங்கள் வீட்டில் இருந்து கொண்டு பராமரிப்பினைப் பெறுதல்**

ஆரோக்கிய பராமரிப்புச் சேவைகளை மக்கள் அடைவதற்கான வழிகளை முன்னேற்றும் முயற்சி, Lakeridge Health அமைப்பில் முன்னுரிமை வகிக்கும் ஒன்றாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. பெரும்புல நோய் பரவிவரும் இக்காலத்தில் இதன் முக்கியத்துவம் மேலும் அதிகமாகி உள்ளது. வெளிநோயாளருக்கான குருதிச் சுத்திகரிப்பு (dialysis), உளநலச் சேவைகள் மற்றும் நோயின்

பின்னான புனர்வாழ்வு (rehabilitation) போன்ற சேவைகளை கணினி உதவியுடன் வழங்குவதில் நாம் அடைந்த வெற்றியின் அடித்தளத்தில், Lakeridge Health ஆரோக்கிய சேவை அமைப்பு இப்பொழுது Virtual Urgent Care Clinic (இணையம் வழியான அவசர பராமரிப்பு சிகிச்சை நிலையம்) என்ற ஒரு புதிய திட்டத்தை ஆரம்பித்து உள்ளது.

இப்புதிய சிகிச்சை நிலையம், உயிர் ஆபத்து இல்லாத மருத்துவ நிலைமைகளின் பொழுது, பெருமளவுக்கு ஒரு முன்னேற்பாடு இல்லாமல் உட்புகும் சிகிச்சை நிலையத்தினை (walk-in clinic) போன்றே தொழிற்படுகிறது. இதில் உள்ள ஒரே வேறுபாடு என்னவெனில், இப்பராமரிப்பினை எங்கு இருந்து கொண்டும் ஒரு காவிச் செல்லும் கைத் தொலைபேசி வழியாக அல்லது WiFi தொடர்பு உடைய கணினிவழியாகப் பெற முடிகிறது. நோயாளர்கள் பாதுகாப்புடன் கூடிய ஒரு மின்னலை வலைத் தொடர்பு (network) வழியாக ஒரு மருத்துவருடன் உரையாடி மருத்துவ ஆலோசனை மருந்துகளுக்கான துண்டுச் சீட்டு ஆகியவற்றுடன், தேவையென்றால் இன்னுமொரு இடத்தில் தொடர்ந்து சிகிச்சை பெறும் தொடர்பு ஏற்பாட்டையும் பெற்றுக் கொள்ள முடியும். கணினி மூலம் நடைபெறும் இந்த சிகிச்சை நிலையத்தின் சேவைகளை நீங்கள் பெற விரும்பினால் தயவு செய்து இங்கு www.lh.ca. சென்று பாருங்கள்.

**அட்டவணைப்படுத்திய சத்திர சிகிச்சைகள்**

வைத்தியசாலைகளில் உட்புற பராமரிப்புக்காக அனுமதி தேவைப்படும் கோவிட்-19 நோயாளர்களின் எண்ணிக்கையில், மேலும் பெருக்கம் ஏற்படும் ஒரு நிலைமைக்கென்று நாம் எம்மைத் தயராக்கும் இச்சமயத்தில், Lakeridge Health ஆரோக்கிய அமைப்பு Oshawa Hospital மற்றும் Ajax Pickering Hospital ஆகிய வைத்தியசாலைகளில் அட்டவணைப்படுத்தி நடைபெறும் சத்திரசிகிச்சை நிகழ்வுகளின் எண்ணிக்கையை, கஷ்டமான ஒரு முடிவை எடுத்துக் குறைத்து உள்ளது.

எம்மால் முடிந்த அளவு அதிக எண்ணிக்கையில் சத்திர சிகிச்சைகளை எல்லோருக்கும் பாதுகாப்பான ஒரு சூழலில் தொடர்ந்து செய்வதே எமது நோக்கமாக உள்ளது. ஒவ்வொரு சத்திரசிகிச்சையும் அது தேவைப்படும் நபருக்கு அதிமுக்கியமாக உள்ளது என்றபோதிலும், இன்றைய நிலைமைக்கு ஏற்றபடி தற்காலிகமாகப் பின்போடப்பட்டு உள்ள உள்ளக நோயளரின் சத்திர சிகிச்சைகளுக்கான நேரத்தில், ஒரே நாளில் நடைபெறும் பகல்நேர சத்திரசிகிச்சைகளை அல்லது வெளிநோயாளர் சேவைகள் தேவைப்படுவோரை எடுத்துக் கொள்ள முடிகிறது. கோவிட்-19 நோயின் காரணமாகச் சுகவீனம் அடைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை நாம் காணமுடிவதனால், திட்டமிட்டு அட்டவணைப்படுத்திய சத்திர சிகிச்சைகளில் அதிக சதவீதமானவற்றை பின்போட வேண்டிய நிலை இனிமேலும் ஏற்படலாம்.

எமது நோயாளர்களின் தேவைகளை எப்படி நாம் தொடர்ந்து பூர்த்தி செய்யலாம் என்பதைத் தீர்மானிப்பதற்காக, ஒவ்வொரு சத்திர சிகிச்சையினையும் நாம் மீளாய்வு செய்து வருகிறோம். எப்பொழுதும் போலவே இவை பற்றிய முடிவுகளை எடுக்கும்பொழுது, நாங்கள் தர்ம

முறையிலான செயற்பாட்டுக் கட்டமைப்பின் கீழ், எமது சேவை விழுமியங்களுக்கு உட்பட்டு நடந்து கொள்கிறோம். வழக்கமாக நாம் நிறைவேற்றும் ஏண்ணிக்கையில் சத்திரசிகிச்சைகளை செய்யும் ஒரு நிலைக்கு, பாதுகாப்பாக அவற்றைச் செய்யும் நிலைமை உண்டான உடனே திரும்புவோம்.

**கோவிட்-19 பரிசோதனை: அறிகுறிகள் உங்களுக்கு உண்டு என்றால் தாமதிக்க வேண்டாம்**

இந்த நோயுக்கான வைரசுக் கிருமியுடன் போராடுவதற்கு, ஆரம்ப நிலையில் பரிசோதனைக்கு உள்ளாவது முக்கியம் ஆகும். நீங்கள் அல்லது உங்கள் குடியிருப்பு இல்லத்தில் உள்ள யாரும் ஒருவருக்குச் சுகவீனமான உணர்வு ஏற்படுமானால், நீங்கள் உடனடியாக Covidswab.lh.ca. இணையத் தளத்துக்குச் சென்று கோவிட்-19 நோய்க்கான பரிசோதனை ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுங்கள். இதனைச் செய்ய நீங்கள் தாமதித்தால், உங்களுக்குத் தெரியாமலே இந்த வைரசுக் கிருமியை பரப்புகின்ற ஆபத்து நிகழக் கூடும்.

டூறாம் பிரதேசம் அடங்கிலும் கோவிட்-19 பரிசீலனை நிலையங்கள் ஆறு உள்ளன என்பதுடன் அவற்றின் துணை ஸ்தலங்களாக ஆறு இடங்கள் உள்ளன. இவற்றுடன் செயற்படுகின்ற ஒரு நடமாடும் கோவிட்-19 பரிசோதனை பேருந்தும் (Bus) பரிசோதனைக்கான செயற்திறன்களை சமூகத்தின் உட்புறத்துக்குக் கொண்டு செல்கின்றது. வீட்டிலேயே தங்கிவிடுகின்ற முதியோர் அல்லது சோதனை ஸ்தலம் ஒன்றுக்குப் பிரயாணம் செய்ய முடியாமல் உள்ள மக்களுக்கு இது உதவியாக உள்ளது. இப் பணி முயற்சியில் முன்நின்று செயற்பட்டு, எமது சமூகத்தில் உள்ள மிக நலிவுற்ற மக்களுக்கு செய்யும் உதவிக்காக நாங்கள் டூறாம் பிரதேச துணை மருத்துவக் குழுவினர்களுக்கு (Durham Region Paramedics) நன்றி கூறுகிறோம். பரிசோதனை நிலையங்கள் அமைந்துள்ள இடங்களையும் அவை தொழிற்படுகின்ற நேரங்களையும் அறிவதற்குத் தயவு செய்து எமது website இணையத்தளம் சென்று பாருங்கள்.

**தயவு செய்து விழிப்புடன் இருந்து கொள்ளுங்கள்**

கோவிட் நோய் தொடர்பிலான செயல்முறைகளின் விளைவாக மக்களுக்கு ஏற்படும் “கோவிட் நோய் உளஅயர்ச்சி” (“COVID fatigue”), நிஜமாக ஏற்படும் ஒன்று என்பதை நாம் உணருகிறோம். ஆனாலும், முன்னெப்பொழுதையும் விட இப்பொழுதுதான் உங்கள் உதவி எங்களுக்கு மிகவும் தேவையாக உள்ளது. தயவுசெய்து இந்த நோய்க்கான அடிப்படைப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி நடந்து கொண்டு, விழிப்புடன் இருந்து கொள்ளுங்கள். பாதுகாப்பு நடைமுறைகள் பின்வருமாறு : வீட்டிலேயே தங்கிவிடுதல், அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் வெளியே செல்லுதல், எங்களுடன் கூடி வாழுவோருடன் மட்டும் என்று நாம் தொட்டுப் புழங்குவதைக் கட்டுப்படுத்தல், அடிக்கடி எம் கைகளைக் கழுவுதல் மற்றும் சமூகரீதியாக நாம் புழங்கும் மக்கள் கூட்டத்துக்கு வெளியே செல்லும் பொழுது, முகக் கவசம் ஒன்றினை அணிந்து கொள்ளுதல்.

சமூகத்தில், இனரீதியாக அல்லது இனக்குழு ரீதியாகச் சிறுபான்மையாக உள்ள மக்கள், கோவிட்-19 நோயினால் கூடுதலாக, அளவுக்கு மீறிய விகிதாசார எண்ணிக்கையில் பாதிக்கப்படுகின்றனர்

என்று ஆராய்ச்சி முடிவுகள் பல சந்தர்ப்பங்களில் காட்டுகின்றன. இந்த மாதம், நாம் கறுப்பு இன வரலாற்று மாதம் (Black History Month) என்று அங்கீகரித்து உள்ள நிலைமையில், பல்லின மக்கள் வாழும் டூறாம் பிரதேசச் சமூகத்தினர் மத்தியில் உள்ள எல்லோரையும் பாதுகாத்து ஆதரவு வழங்குவதற்காக, நாம் தொடர்ந்து விழிப்புடன் நடந்து கொள்வது முக்கியம் ஆகிறது.

கனடா தேசம் கூடிய அளவில் பல்லின இயல்பு கொண்ட, மனிதாபிமான உணர்வு காட்டுகின்ற, செல்வம் பொங்கும் நாடாக மாறுவதற்கு மேற்கொண்ட பயணத்தின் பொழுது, அதனை வடிவமைக்கத் தம் பங்கினை ஆற்றியுள்ள கறுப்பு இனக் கனேடிய மக்களின் பல முக்கிய சாதனைகள் மற்றும் பங்களிப்புகளைக் கௌரவிக்கும் காலமாக, இந்தக் கறுப்பு இன வரலாற்று மாதம் கருதப்படுகிறது. இந்த மாதம் முழுவதிலும் பல்வேறு செயற்பாடுகளும் அறிவிப்புகளும் இதன் தொடர்பில் நாம் திட்டமிட்டு இருக்கிறோம். இவற்றில் ஒன்றாக டூறாம் பிரதேசத்துக்குரிய *Together We Rise* (ஒன்றாக நாம் எழுவோம்) என்ற இணைய வழிப் பிரச்சாரம் அமைந்துள்ளது. இங்குள்ள மக்கள் மத்தியில், ஒருவர் மற்றவரின் வேறுபாடுகளை மதித்துக் கொண்டாடுகின்றவாறு யாவரையும் ஏற்று உள்ளடக்கும் ஒரு கலாச்சாரத்தைக் கட்டி ஏழுப்பும் முயற்சியில், Lakeridge Health ஆரோக்கிய சேவை அமைப்பு எவ்வாறு உழைத்து வருகின்றது என்பதை எமது தலைவர்களில் சிலர் விளக்குவதைக் காண்பதற்கு, தயவு செய்து எமது காணொளியை இங்கு சென்று here பார்வையிடுங்கள்.

கறுப்பு இன வரலாறு மாதத்தினைக் கொண்டாடும் நோக்கத்துடன், டூறாம் பிரதேசம் அடங்கிலும் அதற்கு வெளியிலும் நிகழுகின்ற பல்வேறு செயற்பாடுகளில், எங்களுடன் சேர்ந்து நீங்களும் பங்குபற்ற வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம். மக்கள் மத்தியில் சமத்துவம், சம அங்கீகாரம் மற்றும் சமூகநீதி ஆகியவற்றை வளர்ப்பதற்காகத் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் முயற்சியை ஆதரிக்க இவை உதவுகின்றன.

எமது திறன்கள் மற்றும் அறிவு ஆகியவற்றை பயன்படுத்தி, கருணையும் அன்பும் காட்டி எங்களுடைய நோயாளர்களுக்கு நாம் பராமரிப்பு வழங்க வேண்டும் என்ற அழைப்பு எங்கள் முன் வைக்கப்பட்டு உள்ளது. உலகளாவி நிற்கும் இப் பெரும்புல நோயுடன் நாம் தொடர்ந்து போராடும் இச்சமயத்தில், எங்களுடைய சேவை மிகத் தேவையாக உள்ள மக்களுக்கு உதவுவதற்காக ஆரோக்கிய பராமரிப்புத் துறையில் யாவும் அடங்கிய ஒரு சேவைத்திட்டத்தை உருவாக்கவென்று நாம் மேற்கொண்டு உள்ள மாற்றங்கள் நிறைந்த பிரயாணத்தில், நாம் தொடர்ந்து முன்னேறி வருகிறோம்.

தயவுசெய்து ஆரோக்கியத்துடன் பாதுகாப்பாக இருந்து கொள்ளுங்கள்.

சிறப்பான வாழ்த்துக்களுடன்,

சிந்தியா டேவிஸ்
தலைவர் மற்றும் பிரதம நிர்வாக அதிகாரி
Cynthia Davis
President and CEO

கலாநிதி ரோனி ஸ்ரோன்
பணியாளர் குழுத் தலைவர்
Dr. Tony Stone
Chief of Staff